**STARTING TIME 10.56 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 6/2025**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 20.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ராஜம்மாள்** Husband's Name : **கிருஷ்ணர்**

Address : காந்தி நகர், வேடல் கிராமம் மதுரா, அரக்கோணம் வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 49

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .**

1. நான் இவ்வழக்கில் எத்தனையாவது பிரதியாக உள்ளேன் என்றால், அது பற்றி நினைவில் இல்லை. என் தகப்பனார் இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால், இவ்வழக்கை எனது தகப்பனார் அவராக தாக்கல் செய்யவில்லை, அவரை ஏமாற்றி எனது சகோதரர்கள் நரசிம்மன் மற்றும் குணசேகரன் இவ்வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார்கள்.

2. இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது எனது தகப்பனார், எனது மகள் உட்பட 5 பேருக்கு அவரது சம்மதத்துடன் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார், எனது மகள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை, உயில் எழுதுவதற்கு பதிலாக செட்டில்மெண்ட் பத்திரமாக எழுதிக் கொண்டார் என்று எனது தகப்பனார் மூலம், எனது சகோதரர்கள் இருவரும் இவ்வழக்கை

தாக்கல் செய்துள்ளார்கள். எனது தகப்பனார், எனது மகள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி தெரியாது.

3. எனது சகோதரர்கள் இருவரும் எனது தகப்பனாரை ஏமாற்றி இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால், அவர் நீதிமன்றத்திற்கே வரவில்லை, அவரை ஏமாற்றி தான் கையெழுத்து வாங்கினார்கள். எனது தகப்பனார் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்ற போது நான் உடன் சென்றேனா என்றால், எனது தகப்பனார் வழக்கறிஞர் அலுவலகத்திற்கே போகவில்லை, ஏமாற்றி தான் கையெழுத்து வாங்கினார்கள். நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல.

4. எனது தகப்பனார் உயிருடன் இருந்த வரை எனக்கு அவருடன் பேச்சு வார்த்தை இருந்ததா என்றால், நன்றாக தான் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார், அப்போது நிலத்தையும் நாங்கள் பயிர் செய்துக் கொண்டிருந்தோம், அதன் பிறகு இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு அவரை எங்களிடமிருந்து ஏமாற்றி அழைத்து சென்றுவிட்டார்கள்.

5. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனது மகள், எனது தகப்பனார் மீது வேலூர் நிலஅபகரிப்பு பிரிவில் புகார் ஒன்றை கொடுத்தார் என்றால், சரிதான். அந்த புகாரின் பேரில் என் தகப்பனாரை போலீசார் விசாரித்தார்களா என்றால், இல்லை. மேற்படி புகாரின் பேரில் எனது தகப்பனாரை போலீசார் விசாரிக்கவில்லை என சொல்வது பொய் என்றும், போலீசார் விசாரித்த போது தான் உயில் எழுதுவதற்கு பதிலாக செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டது தெரிய வந்தது என்றால், சரியல்ல.

6. இவ்வழக்கில் நான், எனது மகள், எனது கணவர் மற்றும் எனது மகன் அனைவரும் சேர்ந்து ஒரே பதிலை தாக்கல் செய்தோமா அல்லது வெவ்வேறு

பதிலை தாக்கல் செய்தோமா என்றால், ஒரே பதிலை தான் தாக்கல் செய்தோம். மேற்படி பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால், தெரியும். அந்த பதிலுரையில் எனது சகோதரர்கள் இருவரும் எனது தகப்பனாரை என்னுடன் பேசவிடாமல் செய்துவிட்டார்கள் என சொல்லவில்லை என்றால், சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது பொய் என்றும், அதுபோல் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

7. என் தகப்பனார் 5 செட்டில்மெண்ட் பத்திரங்களை கேட்டுக் கொண்டதன் பேரில் எழுதினாரா அல்லது தன்னிச்சையாக எழுதினாரா என்றால், தன்னிச்சையாக தான் எழுதினார். பத்திரப் பதிவுக்குண்டான செலவுகளை எனது தகப்பனாரே பார்த்துக் கொண்டாரா என்றால், இல்லை, அவரவருக்குண்டான பத்திர செலவுகளை அவரவரே பார்த்துக் கொண்டனர். நான் சொல்வது பொய் என்றும், எனது தகப்பனார் தன்னிச்சையாக செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதவில்லை என்றும், அதனால் தான் பத்திர செலவை அவரவரே பாரத்துக் கொண்டதாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

8. எனது தம்பி பாலகிருஷ்ணன், எனது மகளிடமிருந்து எப்போது பிரிந்து சென்றார் என்றால், தேதி, மாதம், வருடம் தெரியவில்லை. பாலகிருஷ்ணன் எனது மகளை விட்டு பிரிந்து செல்வதற்கு முன்பு சில மாதங்கள் வேடல் கிராம பேருந்து நிறுத்தத்தில் தான் தங்கி இருந்தார் என்றால், சரியல்ல, எனது மகளை விட்டு பிரிந்து சென்ற போது வீட்டில் இருந்து தான் போனார், அதற்கு முன்பு தான் அந்த பேருந்து நிறுத்தத்தில் தங்கி இருந்தார்.

9. எனது மகளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால், தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை, ஆனால் என் மகள் 10-ம் வகுப்பு படித்து முடித்தவுடன் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்கு பிறகு எனது மகள் அவரது கணவருடன் நல்லபடியாக குடும்பம் நடத்தாததால் தான் எனது மகளை

அவர் கணவர் பிரிந்து சென்றுவிட்டார் என்றால், சரியல்ல.

10. எனது மகளிடமிருந்து அவர் கணவர் பிரிந்து சென்ற 2–1/2 வருடத்திலேயே எனது மகளுக்கு வேறு திருமணம் செய்து வைத்தோம் என்றால், எனது தகப்பனார் தான் அந்த திருமணத்தை செய்து வைத்தார். மேற்படி திருமணத்தை எனது தகப்பனார் செய்து வைத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல, எனது பேத்தி வீட்டில் இருக்க வேண்டாம் என சொல்லி எனது தகப்பனார் தான் எனது மகளுக்கு 2–ம் திருமணம் செய்து வைத்தார்.

11. எனது மகள் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த பிறகு அந்த செட்டில்மெண்டில் உள்ள சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வந்ததாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஆக செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி எனது மகள் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல, எனது மகளுக்காக நாங்கள் அனுபவித்து வருகிறோம், அவரும் உடன் வந்து பார்த்துக் கொள்கிறார்.

12. எந்த வருடத்தில் இருந்து, எந்த வருடம் வரை எனது மகள் பெயரில் எழுதி வைத்த சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வந்ததாக சொல்கிறோம் என்றால், பத்திரம் எழுதிய 2013–ம் ஆண்டில் இருந்து எனது தகப்பனார் காலமாகும் வரை நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். அதை நிரூபிக்க சாகுபடி அடங்கல் பதிவேடு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நாங்கள் அனுபவித்து வருவதற்கு ஆதாரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால், வீட்டில் இருந்தால் இருக்கும்.

13. இவ்வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்த சமயத்தில், எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே இவ்வழக்கு சொத்துக்களை பொறுத்து 2–ம் வாதி பெயருக்கு எனது தகப்பனார் ஒரு உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்றால், அதுபோல் எதுவும் எழுதவில்லை. எனது தகப்பனார் எழுதியதாக

சொல்லி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உயில் சாசனத்தை நான் பார்த்தேனா என்றால், பார்த்தேன்.

14. அந்த உயில் சாசனத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ள சாமிநாதன் மற்றும் ஆறுமுகம் என்பவர்களை தெரியுமா என்றால், தெரியும். அவர்களுக்கும், எங்களுக்கும் பிரச்சனை உள்ளதா என்றால், உள்ளது. உயிலில் சாட்சி கையெழுத்து செய்தவர்களுக்கும், எங்களுக்கும் தகராறு உள்ளது என்ற விவரத்தை பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. அந்த உயிலை எழுதியது வழக்கறிஞர் ஒருவர் தான் எழுதியது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிலே எழுதவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. உயிலை எழுதிய வழக்கறிஞருக்கும், சாட்சி கையெழுத்து செய்துள்ளவர்களுக்கும் மோசடியாக உயிலை தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல.

15. எனது மகள் பெயருக்கு எனது தகப்பனார் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய போது அதற்கான மூலப்பத்திரத்தின் அசல் மற்றும் பட்டா பாஸ் புத்தகத்தை எனது மகளிடம், எனது தகப்பனார் கொடுத்தாரா என்றால், ஒரே ஒரு மூலப்பத்திரம் தான் இருந்தது, அதை எனது அண்ணன் நரசிம்மனிடம் கொடுத்துவிட்டார். எனது மூத்த அண்ணன் நரசிம்மன் இவ்வழக்கில் 7–ம் பிரதிவாதி என்றால், சரிதான். எனது மகள் பெயரில் எழுதிய சொத்திற்கு ஒரே ஒரு மூலப்பத்திரம் தான் உள்ளது என நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. எனது மகள் பெயருக்கு எழுதி வைத்த சொத்து வந்த விவரமே தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

16. எனது தகப்பனார் எந்த வருடம் காலமானார் என்றால், இந்த வருடம் மார்கழி மாதம் வந்தால், 5 வருடம் ஆகிறது, தேதி, மாதம் நினைவில் இல்லை. தாவாவில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களையும் எனது தகப்பனார்

வழக்கறிஞரிடம் கொடுத்து அவர் மூலமாக தான் ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் எந்த விவரம் தெரியாமல் எனது தகப்பனார் இவ்வழக்கை தாக்கல் செய்யவே இல்லை என பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

17. எனது தகப்பனார் மீது காவல்துறையில் எனது மகள் புகார் கொடுத்த பிறகு எனது தகப்பனாரை விசாரித்த போது தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தது தெரிய வந்தது என்றும், அந்த விவரம் தெரிந்த பிறகு இவ்வழக்கையும் தாக்கல் செய்துவிட்டார் என்றால், சரியல்ல. என் தகப்பனார் அவரது வயோதிக நிலையின் காரணமாக தான், 2–ம் வாதி பெயரில் உயிலை எழுதி வைத்துள்ளார் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை தற்போது 2–ம் வாதி பாலகிருஷ்ணன் தான் அனுபவித்து வருகிறார் என்றால், என் தகப்பனார் காலமான பிறகு தான் அவர் அனுபவித்து வருகிறார்.

18. என் தகப்பனார் எனது மகள் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியதாக சொல்வது பொய் என்றும், 2–ம் வாதி பெயரில் உயில் எழுதியது தான் உண்மை என்றால், சரியல்ல. எனவே, எனது மகள் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தும், எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் அவர் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.44. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.20 14:14:00 +0530